**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**Deposition of Witness – Crl. Misc. 39**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**Deposition of Witness for : PW – 9 – திரு. மணியன்.**
*** * * * * * ***

**(1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியானவர், காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).**

**<u>அ.சா. 9 மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

(1) அ.சா.1 காணொளி காட்சி வாயிலாகத் தோன்றினார். இந்த வழக்கில் வழக்குக் கோப்பை எந்தத் தேதி மற்றும் எங்கு வைத்துப் பெற்றுக்கொண்டேன் என்றால், கடந்த 24.04.2018 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்குக் கோப்பை என்னிடம் ஒப்படைத்த காவல் ஆய்வாளரின் பெயர் என்ன என்றால், திரு.C.செந்தில்குமார் ஆவார். அவர் காவல் சார்பு ஆய்வாளர் ஆவார். திரு.C.செந்தில்குமார் என்பவர் பிரிவு 161 கு.வி.மு.ச.–இன் கீழான வாக்குமூலம் பதிவு செய்து வைத்திருந்தாரா? என்றால், விசாரித்து வைத்திருந்தார். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பார்வை மகசர் சாட்சிகளை எத்தனை மணிக்கு நான் விசாரித்தேன் என்றால், 09.50 மணிக்கு விசாரித்தேன். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் தேதியானது 20.04.2018 ஆம் தேதி என்றால், சரிதான்.

(2) இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை 24.04.2018 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை பத்தி 8–இல் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். ஆனால், CSR வழங்ப்பட்டு விசாரணையில் நிலையில் இருந்து அதன்பின்னர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. CSR 109/2018– ஆனது கடந்த 20.04.2018 ஆம் தேதி போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை பத்தி எண். 14–இல் புகார்தாரர் கையொப்பம் பெறப்படவில்லை என்றால், சரிதான்.

அதுபோல் பத்தி 15–இல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் தேதி மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நேரம் குறிப்பிடப்படவில்லை என்றாலும், சரிதான்.

(3) இவ்வழக்கில் மாநகராட்சி ஊழியர்களையோ அல்லது அதிகாரிகளையோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கில் புகாரானது கையொப்பத்திற்குகீழ் தேதி குறிப்பிடப்படாமல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கில் புகாரானது யார் எழுதினார்கள் மற்றும் யாரால் பெறப்பட்டது என்று செந்தில்குமார் விசாரித்துத் தெரிந்துகொண்டாரா? என்பதை நான் விசாரித்தேனா? என்றால், நான் விசாரித்தேன். அவ்வாறு நான் விசாரித்ததில் புகாரை யார் எழுதினார்கள் என்றால், மனுதாரரே எழுதியதாகத் தெரிவித்தார். புகாரில் சாட்சிக் கையொப்பம் எதுவும் இடப்படவில்லை என்றால், சரிதான். புகாரில், 4–வது வரியில், "குருவம்மாள், க/பெ. குணபாலன் என்பவரும், அவரது மகன் பாண்டியும் சேர்ந்து தெருவின் குறுக்காக" என, குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(4) அதுபோல், புகாரில் 20.04.2018 அன்று "மாலை" என்ற எழுத்து இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதுபோல், குருவம்மாளும் மற்றும் அவரது மகன் மருதுபாண்டியும் என்ற வரியில், மருது என்ற எழுத்து இடைச்செருகலாகக் சேர்க்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். பொதுவாக, எங்கள் காவல் நிலையத்தில் CSR வழங்கும்போது, சம்பந்தப்பட்ட புகார்தாரரிடம் கையொப்பம் பெறுவோம் என்றால், சரிதான். இந்த வழக்கில் CSR–இல் போடப்பட்டுள்ள புகார்தாரரின் கையொப்பத்திற்கும், புகாரில் போடப்பட்டுள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால், சரிதான். அதுபோல், CSR No. 109/2018–இல் Counter Petitioner குருவம்மாள் மற்றும் பாண்டி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதுபோல், புகாரின் தன்மை என்ற இடத்தில் இடப் பிரச்சனை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(5) அதுபோல், மனுதாரரை, எதிர்மனுதாரர் மிரட்டியதாக CSR–இல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், மனுவின் தன்மை என்ற இடத்தில் பொதுவாக

இடப் பிரச்சனை எனக் குறிப்பிட்டுள்ளோம். புகார் மனுவில் மிரட்டியது சம்பந்தமாக சொல்லப்பட்டுள்ளது. எனது விசாரணையில், எதிரிகள் என்ன வார்த்தைகள் பயன்படுத்தி திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சிகள் சொல்லியுள்ளார்களா? என்றால், ஏன்டி தேவிடியா மகளே, அவுசாரி மகளே என்று மிரட்டியுள்ளார்கள். புகாரில், நான் தற்போது சொல்லியுள்ள 2–வது வார்த்தை சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல.

(6) புகாரில், கீழிலிருந்து 6–வது வரியில், வெளியே வந்தால், உன்னை இழுத்து அம்மணமாக ஓடவிடுவேன் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார்களா? என்றால், இல்லை. இவ்வழக்கில் புகார்தாரர் தவிர்த்து மற்ற சாட்சிகள் அனைவரும் கேள்விப்பட்ட சாட்சிகள் என்றால், சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகளை விசாரித்துள்ளேன். நான் தயாரித்த அ.சா.ஆ.6 வரைபடத்தில் வடக்குப் பக்கம் E.B. போஸ்ட் லைட் இருந்ததாகச் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். அதுபோல், சம்பவயிடத்திற்கு பக்கத்தில் ஆலமரமோ, புளியரமோ இருந்ததாகக் காட்டப்படவில்லை என்றால், சரிதான். சம்பவம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பாரதி என்பவரின் வீடு இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(7) அதுபோல், சம்பவ இடத்திற்கு எதிர்திசையில்தான் ரேவதி என்பவரின் வீடு இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். ரேவதி என்பவரின் வீட்டிற்கு அருகில்தான், குருவம்மாள் என்பவரின் வீடும், அவருக்குச் சொந்தமான காலி மனையிடமும் உள்ளது என்றால், சரிதான். பார்வை மகசர் சாட்சிகளாக சம்பவயிடத்திற்கு அருகில் உள்ள பாரதி, முனியாண்டி, ராமர் ஆகியோர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கில் செங்கல்லை வைத்து கதவின்மீது எறிந்ததாக சொல்லப்பட்டுள்ளதா? என்றால், சரிதான். செங்கல்லோ அல்லது மண்குவியலோ இருந்ததாக அ.சா.ஆ. 6 இல் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கில் சேதப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கதவின் புகைப்படத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

(8) செங்கல்லையோ, கதவையோ கைப்பற்றாததால் அத்தாட்சி வாயிலாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கில் சிவில் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு புகார்தாரர் புகார் கொடுத்தள்ளார் என்றும், முறையாக விசாரணை செய்யாமல், 2 புகார்களையும் பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ப்பபட்டுள்ளது என்றால், சரியல்ல. இவ்வழக்கில் அரிவாளோ, அரிவாள்மனையோ அத்தாட்சியில் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், சரிதான். சொன்ன மாதிரியான ஆயுதங்கள் எதுவும் இல்லாததால்தான் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால், சரியல்ல. உரிமையியல் வழக்கு என்று முறையாக விசாரிக்காமல் குற்றவியல் வழக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால், பார்வை மகசர் சாட்சிகளை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளேன் என்றால், சரியல்ல.

(9) சாட்சிகளை விசாரணை செய்யும்போது, வீடியோ பதிவு செய்யவில்லை என்றால், சரிதான். அவர்கள் விடுவிக்கப்படவேண்டியவர்கள் என்றால், சரியல்ல. சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. மதிப்புச் சான்றிதழ் வழங்கியுள்ளவரை என்றைய தேதியில் விசாரித்துள்ளேன் என்றால், கடந்த 21.05.2018 ஆம் தேதியன்று விசாரித்தேன். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. 1–வது எதிரியை சொன்ன நேரம் மற்றும் இடத்தில் வைத்து கைது செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. நான் முறையாக விசாரணை செய்யாமல், எதிரிகள்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.09.07 05:45:32 +0530

நீதித்துறை நடுவர்,
தேனி.